# FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8082385

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : மாவட்டம் — தூத்துக்குடி
   PS: காவல்நிலையம் — ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி
   Year: ஆண்டு — 2024
   FIR No.: மு.த.அ. எண் — 03/2024
   Date: நாள் — 20.06.2024

2. (i) Act சட்டம்: PC Act, 1988 as Amended in 2018 — Sections பிரிவுகள்: 7 and 12
   (ii) Act சட்டம்: Cr.P.C — Sections பிரிவுகள்: r/w 102
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : –

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — On 19.06.2024 Before 11.45 hrs
   Date from : நாள் முதல்
   Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல்
   Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் — 20.06.2024
   Time : நேரம் — 11.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — 20.06.2024
   Time : நேரம் — 11.15 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும். — **Regional Transport Office, Kovilpatti 60 Kms North West.**
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — **Tr.S.K.Muthu**
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — **Santhiᵐᵃ Kavalan**
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — 51/2024
   (d) Nationality : நாட்டினம் — Indian
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் — **Special Thasildar (Land Acquisition)**
   (g) Address : முகவரி — **AORF, SIPCOT Unit-3, Thoothukudi.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   **(1.) Tr.G.Neduncheliya Pandian, aged 51/2024, S/o M.S.Gurusamy, Regional Transport Officer, Kovilpatti, Thoothukudi District and 7 others.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் — இல்லை

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

----

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ----

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ----

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

-- Separate Sheet Enclosed --

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed **M.Sutha**........... Rank **Inspr of Police**.... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லலையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

20/6/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

**20.06.2024 at 12.30 hrs**

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

20.6.2024

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
**திரு.S. Peter Paul Durai**
Deputy Superintendent of Police
Vigilance and Anti Corruption

Name: பெயர் ..............................
Rank: நிலை ..................No. எண் ..........

தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 03/2024, பிரிவு 7 and 12 of PC Act, 1988 as Amended in 2018 r/w 102 Cr.P.C – ன் தொடர்ச்சி.

பணிந்தனுப்பப்படுகிறது :-

| | |
|---|---|
| 1. Tr.G.Neduncheliya Pandian, aged 51/2024, S/o M.S.Gurusamy, Regional Transport Officer, Kovilpatti, Thoothukudi District.<br><br>**Private Individuals :**<br><br>2. Tr.S.Jothi Sivanantham, aged 49/2024, S/o Subramanian, No.120-D, Thirupathi Nagar, Illuppaiyurani Post, Kovilpatti Taluk, Thoothukudi District- 628 502.<br><br>3. Tr.S.Manikandan, aged 43/2024, S/o Saravana Perumal, No.1/40, North Street, Periyakollapatti, Sathur Taluk, Virudhunagar District- 626203.<br><br>4. Tr.P.S.Velu, aged 60/2024, S/o P.Sorimuthu, No.27D/3, Palamkottai Road, Kalugumalai, Kovilpatti Taluk, Thoothukudi District – 628552.<br><br>5. Tr.P.Manoharan, aged 52/2024, S/o S.Puthi Sigamani, No.826/2, Thomsan Nagar, Illuppaiyurani, Kovilpatti Taluk, Thoothukudi District.<br><br>6. Tr.C.Ramachandran, aged 57/2024, S/o Chokkalingam, No.25A, 2nd Street, Valluvar Nagar, Kovilpatti, Thoothukudi District – 628506.<br><br>7. Tr.T.Kumar, aged 42/2024, S/o M.Thirunavukkarasu, No.410, Inam Maniyachi, Kovilpatti, | தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் அலுவலக பணியாளர்கள் மேற்படி வட்டார போக்குவரத்து அலுவலக பகுதிக்கு உட்பட்ட பகுதியில் இருந்து அங்கு வரும் பொதுமக்களிடம் புதிய வாகன பதிவு, வாகனப் பதிவு சான்று புதிப்பித்தல், வாகனங்களுக்கு தகுதிச்சான்று வழங்குதல், வாகன உரிமம் வழங்குதல், வாகன உரிமம் புதுப்பித்தல் போன்ற அன்றாட மற்றும் அத்தியாவசிய பணிகளை மேற்கொள்வதற்கு இடைத்தரகர்கள் மூலமாகவும் நேரிடையாகவும் லஞ்சம் பெற்று வருவதாக கிடைத்த ரகசிய தகவலின்பேரில் 19.06.2024 ஆம் தேதி காலை 11.45 மணி முதல் மாலை 19.30 மணி வரை ஆய்வுக் குழு அலுவலர் நிலையில் திரு.S.K.முத்து, தனி வட்டாட்சியர் (நில எடுப்பு), அல்லிகுளம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை உருவாக்கம், சிப்காட், அலகு-3, தூத்துக்குடி மாவட்டம் அவர்களுடன் கோவில்பட்டி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் நடத்திய திடீர் |

| | |
|---|---|
| 8. Tr.M.Raja @ Mariappan, aged 37/2024, S/o M.Madasamy, No.1/192A-14, A.N.A.Nagar, Sathur Main Road, Kovilpatti, Thoothukudi District. | சோதனையின் அடிப்படையில் ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் திரு.S.K.முத்து அவர்கள் கொடுத்த புகார் மனுவை 20.06.2024-ம் தேதி நான் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் |

கண்காணிப்புத்துறை அலுவலக பணியில் இருந்தபோது காலை 11.00 மணிக்கு பெற்று தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 03/2024, பிரிவு 7 and 12 of PC Act 1988 as Amended in 2018 r/w 102 Cr.P.C–ன் படி மார்ஜினில் கண்ட எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர்: திரு.S.K.முத்து, தனி வட்டாட்சியர் (நில எடுப்பு) அல்லிகுளம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை உருவாக்கம், சிப்காட், அலகு-3, தூத்துக்குடி மாவட்டம். பெறுநர்: காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி பிரிவு. அய்யா, பொருள் : திடீர் தணிக்கை செயல்முறைகள் - மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது தொடர்பாக. ****** தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில், கடலையூர் ரோட்டில், வடக்கு பார்த்து அமைந்துள்ள கோவில்பட்டி வட்டார போக்குவரத்து அலுவலகத்தை எனது தலைமையில் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் துணை கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் திருமதி.ஜே.அனிதா மற்றும் போலீஸ் பார்ட்டி உதவியுடன் 19.06.2024-ம் தேதி காலை 11.10 முதல் 11.45 மணி வரை கண்காணித்ததில் கோவில்பட்டி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் அலுவலக பணியாளர்கள் மேற்படி வட்டார போக்குவரத்து அலுவலக பகுதிக்கு உட்பட்ட பகுதியில் இருந்து அங்கு வரும் பொதுமக்களிடம் புதிய வாகன பதிவு, வாகனப் பதிவு சான்று புதிப்பித்தல், வாகனங்களுக்கு தகுதிச்சான்று வழங்குதல், வாகன உரிமம் வழங்குதல், வாகன உரிமம் புதுப்பித்தல் போன்ற அன்றாட மற்றும் அத்தியாவசிய பணிகளை மேற்கொள்வதற்கு இடைத்தரகர்கள் மூலமாகவும் நேரிடையாகவும் லஞ்சம் பெற்று வருவதற்கான முகாந்திரம் தெரிய வந்ததால் 19.06.2024-ம் தேதி காலை 11.45 மணி முதல் இரவு 19.30 மணி வரை மேற்படி அலுவலகத்தை தணிக்கை செய்யப்பட்டது. மேற்படி தணிக்கையின் போது திரு.நெடுஞ்செழிய பாண்டியன், வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலகத்தில் உள்ளே உள்ள ஆண்கள் கழிவறையில் ஜன்னல் கண்ணாடி இடுக்கில் பணம்

ரூ.4,350/- மறைத்து வைக்கப்பட்ட நிலையில் இருந்தது. அந்த பணம் குறித்து அலுவலக பணியாளர்கள், நேர்முக உதவியாளர் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலர் ஆகியோரிடம் கேட்க அந்த பணத்திற்கு யாரும் உரிய விளக்கம் அளிக்க இயலவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.4,350/- சந்தேகத்திற்கிடமான வகையில் காணப்பட்டதாலும் பொதுமக்களிடம் லஞ்சமாக பெற்ற பணத்தை அலுவலக பணியாளர்கள் அங்கு மறைத்து வைத்திருக்கலாம் என்ற காரணத்தினாலும் வழக்கு விசாரணைக்காக மேற்படி பணம் **ரூ.4,350/-** செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. பின்னர் திடீர் தணிக்கையின் போது வட்டார போக்குவரத்து அலுவலக வராண்டா அருகில் நின்று கொண்டிருந்த பின்னர் பெயர் விபரம் கேட்டுத்தெரிந்த சாரதா டிரைவிங் ஸ்கூல் நடத்தி வரும் திரு.சு.ஜோதி சிவானந்தம் என்பவரை சோதனை செய்த போது அவரின் மேல்புற சட்டை பாக்கெட்டில் தனியாக கத்தையாக வைத்திருந்த பணம் ரூ.2,000/- குறித்து உரிய விளக்கம் அளிக்காததினால் அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதி மேற்படி பணம் **ரூ.2,000/-** விசாரணைக்காக செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. மேலும் அவருடைய சட்டைப்பையில் தனியாக இருந்த பணம் ரூ.250/- அவருடைய சொந்த செலவிற்கான பணம் என்று தெரிவித்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் திடீர் தணிக்கைக்கு நுழைந்த போது வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் நின்று கொண்டிருந்த பின்னர் பெயர் விபரம் கேட்டு தெரிந்த விளாத்திகுளம் J.P.பாண்டியன் டிரைவிங் ஸ்கூல் பயிற்றுனர் திரு.ச.மணிகண்டன் என்பவரை சோதனை செய்த போது அவரது பேண்ட் பாக்கெட்டில் தனியாக வைத்திருந்த பணம் **ரூ.1,500/-**ற்கு உரிய விளக்கம் அளிக்காததினாலும், சந்தேகத்திற்கிடமான முறையில் வைத்திருந்ததாலும், அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதியும் அந்த பணம் ரூ.1,500/- செயல்முறைகள் மூலம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவருடைய சட்டை பாக்கெட்டில் தனியாக வைத்திருந்த பணம் ரூ.350/- அவருடைய் சொந்த செலவிற்கான பணம் என்று தெரிவித்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. திடீர் தணிக்கைக்கு நுழைந்த போது வட்டார போக்குவரத்து அலுவலக கவுண்டரின் அருகில் நின்று கொண்டிருந்த பின்னர் பெயர் விபரம் கேட்டு தெரிந்த கழுகுமலை S.S.R.P.S பஸ் கம்பெனியில் ஆட்டோ கன்சல்டன்ட்டும், கழுமலை பகுதிக்கு

உட்பட்ட வாகனங்களுக்கு வட்டார போக்கு வரத்து அலுவலக பணிகள் தொடர்பான அனைத்து பணிகளையும் செய்துவந்த திரு.ப.சொ.வேலு என்பவரை சோதனை செய்த போது மேல்புற சட்டைப்பையில் வைத்திருந்த பணம் 400/- சொந்த செலவிற்கான பணம் என்று தெரிவித்ததால் அதை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அப்போது அவர் இந்த பணத்தை தவிர வேறு பணமோ பொருளோ தன்னிடம் இல்லை என்றும் தெரிவித்தார். பின்பு அவர் வட்டார போக்கு வரத்து அலுவலகத்திற்கு அன்று வந்திருந்த வட்டார போக்குவரத்து அலுவலக கட்டிடத்தின் முன்பகுதியில் மரத்தடியில் நிறுத்தி வைக்கபட்டிருந்த TN 69 T 6581 என்ற பதிவெண் கொண்ட Swift காரினை அவரிடம் இருந்த சாவியால் திறந்து சோதனை செய்த போது வாகனத்தின் முன்பகுதியில் உள்ள டேஷ் போர்டிற்குள் கத்தையாக பணம் ரூ.15,000/- காணப்பட்டது. மேற்படி பணம் குறித்து அவர் தெரிவித்த விளக்கம் முன்னுக்கு பின் முரணாகவும், சந்தேகத்திற்கிடமான வகையில் இருந்ததாலும் அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதி மேற்படி பணம் **ரூ.15,000/-** விசாரணைக்காக செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த வாகனத்தின் பின்பகுதி சீட்டில் ஸ்ரீ வேல்முருகன் ஜவுளி ஸ்டோர் என்று அச்சிடப்பட்ட வெள்ளை நிற துணிப்பையினுள் இருந்த TN 20 AD 5099 என்ற வாகனத்தின் அசல் பதிவுச்சான்று அட்டை மேலும் பல வாகன பதிவு சான்று புத்தகம் மற்றும் பல பேப்பர்களுக்கு இடையே காணப்பட்டது. அந்த TN 20 AD 5099 பதிவு சான்று அட்டைக்குள் கத்தையாக பணம் ரூ.5,000/- காணப்பட்டது. அந்த பணம் குறித்து அவர் கூறிய விளக்கம் முன்னுக்கு பின் முரணாகவும், சந்தேகத்திற்கிடமான வகையில் இருந்ததாலும் பணம் **ரூ.5,000/-** அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதி மேற்படி பணம் **ரூ.5,000/-** -மும் TN 20 AD 5099 வாகனத்தின் பதிவு புத்தகமும் செயல்முறைகள் மூலம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அதே பையில் வாகன பதிவு புத்தகங்களுக்கு இடையே தனியாக கத்தையாக காணப்பட்ட பணம் ரூ.11,300/- குறித்தும் அவர் தெரிவித்த விளக்கம் முன்னுக்கு பின் முரணாகவும், சந்தேகத்திற்கிடமான வகையில் இருந்ததாலும் அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதி மேற்படி பணம் ரூ.11,300/- செயல்முறைகள் மூலம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி பணம் இருந்த ஸ்ரீ வேல்முருகன் ஜவுளி ஸ்டோர் என்று அச்சிடப்பட்ட வெள்ளைநிற துணிப்பையும்

செயல்முறைகள் மூலம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி வாகனத்தின் பின்சீட்டிற்கு கீழ்பகுதியில் இருந்த ஸ்ரீ தங்கம் ஜவுளி & ரெடிமேட் என்று அச்சிடப்பட்ட ஆரஞ்சுநிற துணிப்பையினுள் 3 தனித்தனி கத்தைகளாக காணப்பட்ட பணம் ரூ.10,500/-, ரூ.35,700/-, ரூ.5,700/- ஆகியவை குறித்து அவர் தெரிவித்த விளக்கம் முன்னுக்கு பின் முரணாகவும், சந்தேகத்திற்கிடமான வகையில் இருந்ததாலும் அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதி மேற்படி பணம் மொத்தம் ரூ.51,900/- செயல்முறைகள் மூலம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி ஸ்ரீ தங்கம் ஜவுளி & ரெடிமேட் என்று அச்சிடப்பட்ட துணிப்பையும் செயல்முறைகள் மூலம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திடீர் தணிக்கைக்கு நுழைந்த போது வட்டார போக்குவரத்து அலுவலக வளாகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலக கட்டிடத்திற்கு கிழக்கே சுமார் 100 மீட்டர் தொலைவில் தனியாக அமைந்திருந்த அலவலக கட்டிடத்தில் இருந்த நபர்களில் ஒருவராக பின்னர் பெயர் விபரம் கேட்டு தெரிந்த டி.வி.மெக்கானிக்கும், ஓட்டுனர் உரிமம் புதுப்பிக்க வந்தவருமான திரு.பு.மனோகரன் என்பவரை சோதனை செய்தபோது அவரின் மேல்புற சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.6,090/- குறித்து அவரிடம் எவ்வாறு வந்தது என்பதற்கு தகுந்த முகாந்திரம் அளிக்காததினாலும், சந்தேகத்திற்கிடமான வகையில் வைத்திருந்ததாலும் அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதி அந்தப்பணம் ரூ.6,090/- செயல்முறைகள் மூலம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் திடீர் தணிக்கைக்கு நுழைந்த போது அதே அறையில் நின்று கொண்டிருந்த பின்னர் பெயர் விபரம் கேட்டு தெரிந்த வாகனங்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டிவரும் திரு.சொ.ராமச்சந்திரன் என்பவரை சோதனை செய்த அவரின் மேல்புற சட்டை பாக்கெட்டில் தனிக்கத்தையாக வைத்திருந்த பணம் ரூ.13,500/- அவரிடம் எப்படி வந்தது என்பதற்கு தகுந்த முகாந்திரம் தெரிவிக்காததினாலும், முன்னுக்கு பின் முரணாக பதில் தெரிவித்ததாலும், சந்தேகத்திற்கிடமான முறையில் வைத்திருந்ததாலும் அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதி அந்தப்பணம் ரூ.13,500 செயல்முறைகள் மூலம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் தனியாக இருந்த பணம் ரூ.150/- அவருடைய சொந்த செலவிற்கான பணம் என்றதால் அந்த பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் திடீர் தணிக்கைக்கு நுழைந்த போது அதே அறையில் இருந்த பின்னர் பெயர் விபரம் கேட்டு தெரிந்த

வட்டார போக்கு வரத்து அலுவலகத்திற்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு அலுவலக பணிகளை செய்து கொடுத்து வரும் திரு.தி.குமார் என்பவரை சோதனை செய்தபோது அவரது மேல்புற சட்டை பாக்கெட்டில் தனிக்கத்தையாக வைத்திருந்த பணம் ரூ.3,070/- அவரிடம் எப்படி வந்தது என்பதற்கு தகுந்த முகாந்திரம் தெரிவிக்காததினாலும், சந்தேககத்திற்கிடமான வகையில் இருந்ததாலும் அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதி அந்தப்பணம் ரூ.3,070/- செயல்முறைகள் மூலம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. தனியாக வைத்திருந்த பணம் ரூ.120/- அவருடைய சொந்த செலவிற்கான பணம் என்றதால் அந்த பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் திடீர் தணிக்கைக்கு நுழைந்த போது அதே அறையில் இருந்த பின்னர் பெயர் விபரம் கேட்டு தெரிந்த ராஜா டிரைவிங் ஸ்கூல் உரிமையாளர் திரு.மா.ராஜா (எ) மாரியப்பன் என்பவரை சோதனை செய்த போது அவரது பேன்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.3,200/- அவரிடம் எப்படி வந்தது என்பதற்கு தகுந்த முகாந்திரம் தெரிவிக்காததினாலும், சந்தேகத்திற்கிடமான வகையில் வைத்திருந்ததாலும் அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதி அந்தப்பணம் ரூ.3,200/- செயல்முறைகள் மூலம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரிடம் சட்டை பாக்கெட்டில் தனியாக இருந்த பணம் ரூ.210/- சொந்த செலவிற்கான பணம் என்றதால் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. கோவில்பட்ட வட்டார போக்குவரத்து அலுவலக பணம் கையிருப்பு பதிவேடு மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகப் பணியாளர்களுக்கான வருகைப்பதிவேடு ஆகியவை செயல்முறைகள் மூலம் வழக்கு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திடீர் தணிக்கையின் போது மேற்படி அலுவலகத்தில் நின்றிருந்த மற்ற நபர்களிடம் இருந்த பணம் குறித்து கேட்ட போது அவர்கள் அளித்த விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இருந்ததால் அந்த பணம் செயல்முறைகள் மூலம் அவர்களிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் இந்த செயல்முறையில் கைப்பற்றப்பட்ட மேற்படி பணம் மற்றும் ஆவணங்கள் தங்களிடம் உரியவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டு ஒப்படைக்கிறேன். Sd/- 20.06.2024, எஸ்.கே.முத்து, தனி வட்டாட்சியர் (நில எடுப்பு), அல்லிகுளம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை உருவாக்கம், சிப்காட், அலகு-3, தூத்துக்குடி மாவட்டம். Sir, Received the complaint on today (20.06.2024) at 11.00 hrs and

registering the complaint as Thoothukudi V&AC Cr.No.03/2024, U/s 7 and 12 of PC Act, 1988 as Amended in 2018 r/w 102 Cr.P.C. Sd/- 20.06.2024, S.Peter Paul Durai, Dy. Supdt. of Police, V&AC, Thoothukudi Detachment. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, திரு.S.K.முத்து அவர்களின் அசல் புகார் மனு மற்றும் கோவில்பட்டி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் வைத்து தயார் செய்த செயல்முறைகள் ஆகியவற்றை இணைத்து மேன்மைமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்ற நடுவர், தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பியும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை வழக்கு விசாரணைக்காக திருமதி.M.சுதா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி பிரிவு அவர்களிடம் ஒப்படைக்கிறேன்.

20-6-2024

Deputy Superintendent of Police
Vigilance And Anti Corruption
Thoothukudi District
Thoothukudi